செ. கு. எண்: 105 நாள் : 13.10.2015

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை –13.10.2015

5.6.2015 அன்று ஈரோடு மாவட்டம், அந்தியூர் வட்டம், வெள்ளிதிருப்பூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. பழனியப்பன் என்பவர் தோட்டத்தில் மாடுகளை கட்டுவதற்காக சென்ற போது திடீரென மின் கம்பி அறுந்து விழுந்ததில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

5.6.2015 அன்று திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், பெரியம்மாபட்டி உட்கடை சண்முகம்பாறை கிராமத்தைச் சேர்ந்த திரு. சண்முகக் கவுண்டர் என்பவரின் மகன் தங்கவேல் என்பவர் வயல்வெளியில் அறுந்து கிடந்த மின்கம்பியை மிதித்ததால் மின்சாரம் தாக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

5.6.2015 அன்று இராமநாதபுரம் மாவட்டத்தில் பெய்த மழையின் காரணமாக, பரமக்குடி வட்டம், மஞ்சூர் உள்வட்டம், கருத்தனேந்தல் கிராமத்தைச் சேர்ந்த திரு. பாண்டி என்பவரின் மகன் கணேசமூர்த்தி;

6.6.2015 அன்று திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், தண்டலச்சேரி கிராமத்தைச் சேர்ந்த திரு சாரங்கன்;

–– ஆகியோர் இடி, மின்னல் தாக்கியதில் உயிரிழந்தனர் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயர சம்பவங்களில் அகால மரணமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயர சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**